செய்தி வெளியீடு
செ.வெ.எண்.01 நாள்:03.02.2020

# நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (03.02.2020) நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் 34 சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.2.73 கோடி மதிப்பில் கடனுதவிகளை மாவட்ட ஆட்சியர் திருமதி ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

******

நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (03.02.2020) மாவட்ட ஆட்சியர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆப.,அவர்கள் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் குடும்ப அட்டை, வீட்டுமனைப்பட்டா, தொழில் மற்றும் கல்விக் கடன் உதவி, முதியோர் உதவித்தொகை, சாலை, குடிநீர், கழிப்பிடம் மற்றும் மின்சார வசதிகள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 182 மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டது.

பொதுமக்கள் மாவட்ட ஆட்சியர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ.ப., அவர்களிடம் அளித்த இம்மனுக்களின் மீது சம்மந்தப்பட்ட அலுவலர்கள் பரிசீலனை செய்து தகுதி இருப்பின் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் அவர்கள் உத்தரவிட்டார். அதோடு மட்டுமல்லாமல் கடந்த குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தீர்வு காணாமல் நிலுவையிலுள்ள மனுக்களின் மீது விரைவான நடவடிக்கை எடுக்குமாறு துறை ரீதியான அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் உத்தரவிட்டார்.

இம்மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் உதகை, கூடலூர், குன்னூர், கோத்தகிரி பகுதியை சேர்ந்த 34 சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.2.73 கோடி மதிப்பில் கடனுதவிகளையும், சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதகை, குன்னூர் வட்டத்தை சேர்ந்த 18 பயனாளிகளுக்கு தேசிய இந்திராகாந்தி முதியோர் உதவித்தொகை, முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் முதியோர் உதவி தொகை, கோத்தகிரி வட்டத்தை சார்ந்த 7 பயனாளிகளுக்கு மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை மாதந்தோறும் தலா 1000/- பெறுவதற்கான ஆணையினையும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகம் மற்றும் மாவட்ட நிர்வாகம் இணைந்து நடத்திய மாவட்ட அளவிலான திறன் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களையும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.எஸ்.நிர்மலா, தமிழ் நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (திட்ட இயக்குநர்) திரு.பாபு தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு.கண்ணன், உதவி ஆணையர் (கலால்) திரு.பாபு, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.கணேஷ், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.முகம்மது குதுரதுல்லா, குன்னூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் திரு.நடராஜன் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.